# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2032 - 2017 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2017.08.11

*2032 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1212 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | 1226 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1225 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.*-** (i) *அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## அளவ்வ பிரதேச சபை

தேர்ச்சியற்ற III ஆம் தரத்திலான பதிவிக்காக ஆட்சேர்ப்பு

*அளவ்வ பிரதேச சபையில் கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. பதவி வெற்றிடங்களின் விபரம்*

| தொ. இல. | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 01 | பொ.நி.சு 3/ 2016 PL1-2016 ரூ. 24250-10X250- 10X270-10X300-12X330 ரூ. 36410 (பொ.நி.சு. 3/2016 இன் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்) | கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2. | காவல்காரன் | 01 | | |
| 3. | வேலை /துறை தொழிலாளி | 03 | | |
| 4. | சுகாதார தொழிலாளி | 01 | | |

*3.* **தேவையான வேறு தகைமைகள் :**

(i) *விண்ணப்பதாரி இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.*

(ii) *விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு மூன்று (03) வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் அளவ்வை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (வதிவினை கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு சான்றுப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)*

(iii) *விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)*

(iv) *தண்டனைச் சட்டக் கேவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.*

(v) *நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.*

*4.* **ஆட் சேர்த்துக் கொள்ளப்படும் முறை :**

*நேர்முகப் பரீட்சைக்காக கலந்துக் கொள்ளும் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமை மற்றும் வாய்மொழி மூலமான பரீட்சையின் பெறுபேற்றின் படி உரிய பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்படுவர்.*

5. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) *இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். 3 வருடம் தகுதி காண் காலத்துக்கு உட்பட்டதாகும்.*

(ii) *இந்த ஆட்சேர்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக வடமேல் கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவை நிபந்தனைகளுக்கும், நிதிக் கோட்பாட்டுக்கும் அரச திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் வடமேல் மாகாண சபை அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற கட்ளைகளுக்கும் அமைய நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படல் வேண்டும்.*

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவப்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2017.08.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், அளவ்வ பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படுகின்ற பதவியினைக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) விடுகைச் சான்றிதழ் ;
(4) நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(6) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக் கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக் கொள்ளலை காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கு பூரண அதிகாரம் அளவ்வ பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

கே. ஆர். பி. ஜீ. ஆர். கருணாநாயக்க,
செயலாளர்,
பிரதேச சபை - அளவ்வ

பிரதேச சபை அலுவலகம்,
அளவ்வ,
2017, ஓகத்து 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவ்வ பிரதேச சபையில் ................................. பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :- ......................................................................................

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :- ......................................................................................

3. நிரந்தர முகவரி :- ...................................................................................

4. கிராம அலுவலர் பிரிவு :- ......................................................................................

5. பிரதேச செயலாளர் பிரிவு :- ......................................................................................

6. மாவட்டம் :- ......................................................................................

7. பிறந்த திகதி :- ஆண்டு : ................ மாதம்: .............. திகதி : ................

8. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :- வருடங்கள் : ........... மாதங்கள்: ............ நாட்கள் : ............

9. ஆண் / பெண் :- ......................................................................................

10. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின், பரம்பரையாகவா ? பதிவு முறையிலா ? :- ..........................................................

11. திருமணமானவர் /திருமணமாகாதவர் பற்றி :- ..........................................................................................

12. தேசிய ஆளடையாளட்டையின் இலக்கம் :- ..........................................................................................

13. கல்வித் தகைமை :
க. பொ. த. (சா.தர) பரீட்சை
சித்தியடைந்த வருடமும் சுட்டெண்ணும் :- .................................................

| தொ. இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

14. தொழிற் தகைமை : ..................................................

15. சேவை அனுபவம் :

(அ) தற்போது சேவை செய்கின்ற நிறுவனம் : .............................

(ஆ) தற்போது வகிக்கும் பதவி : .............................

(இ) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : .............................

(ஈ) இதற்கு முன் சேவை செய்த சேவை நிலையமும் வகித்த பதவியும் : .............................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும் பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவராவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்றும் எனக்குத் தெரியும்.

.............................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

................................
திகதி

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவகத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியாகிய திரு/திருமதி/செல்வி ....................................... தற்போது இந்த நிறுவகத்தில் சேவை ஆற்றுகின்றார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதத்திலும் எவ்விதத்

தண்டனைக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாகியில்லாதவர் என்றும் இத்துடன் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்பத்திரத்தை அனுமதித்து முன்வைக்கின்றேன்/முன்வைக்கவில்லை.

.............................................,
திணைக்கள/நிறுவன அல்லது அதிகாரம்
அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :- .................................................................
பதவி :- .................................................................
திணைக்களம் :- ....................................................
திகதி :- .................................................................

8 - 361

---

**மத்திய மாகாண அரச சேவையில் உள்ள பதவி வெற்றிடங்கள்**

பன்வில பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையில் பன்வில பிரதேச சபையில் தற்போது பதவி வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கெனப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பன்வில பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் “செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பன்வில பிரதேச சபையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

1. **பதவி** : சுகாதாரத் தொழிலாளர்கள் - தரம் III (ஆரம்பத்தரம் - தேர்ச்சியற்ற)

**2. சம்பள அளவுத்திட்டம்** : இந்தப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் மாதாந்தம் ரூ. 24250 - 10X250-10 X 270-10 X300 -12X330 - ரூபா 36410 ஆகும். 2016 இன் PL I - 2016 (பொது நிருவாகச் சுற்றறிக்கை 03 - 2016 இன் ஆரம்பப் படி) எனினும், சம்பளம்வழங்கப்படும்போது பொது நிருவாகச் சுற்றறிக்கை 03/2016 இன் அட்டவணை **II** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும். (இந்ததச் சம்பள அளவுத்திட்டத்தின் நான்காவது படிக்கு வருவதற்கு முன்னர் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை உண்டு)

**3. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்:**

3.1 விண்ணப்பதாரிகள் அனைவரும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பன்வில பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராக 3 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். வெற்றிடங்களை நிரப்புவதற்கெனப் போதிய தகைமைகளைக் கொண்டோர் பிரதேசத்துக்குள் இல்லாதவிடத்து மட்டுமே அண்மித்த உள்ளூராட்சி நிருவாக எல்லைக்குள் வதிவோரது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரச அல்லது உள்ளூராட்சி அரச சேவையில் ஏற்கனவே பணியாற்றுவோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.

3.4 தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது. அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தகுதியற்றோரது பட்டியலில் பெயர் உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:**

*4.1 கல்வித் தகைமைகள் :*
*இரு அமர்வுகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரம் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஒரு அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*4.2 உடற் தகுதிகள் :*
*ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் கண் பார்வை சிறந்ததாகவும், உடலாரோக்கியம் மற்றும் மனநலம் சிறந்ததாகவும் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையில் ஈடுபடுவதற்குரிய பொருத்தமான உடல் நிலையையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

**5. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

*5.1 இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை.*
*5.2 விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.*
*5.3 தெரிவு செய்யப்படுபவர் நியமனத் தினத்திலிருந்து 03 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவதுடன், தகுதிகாண் கால எல்லைக்குள் சேவை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமாக உள்ளோரது நியமனம் நிரந்தரமாக்கப் படுவதற்கெனப் பரிசீலிக்கப்படும்.*
*5.4 01/2014 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமையச் சேவையில் அமர்த்தப்பட்ட 05 வருட கால எல்லைக்குள் பதவியில் இணைக்கப்பட்ட மொழி மூலத்துக்கு மேலதிகமாக ஏனைய அரசகரும மொழி பற்றிய புலமையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*
*5.5 இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் மேலதிகமாக அரசாங்கம், மாகாண சபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சபையின் செயலாளர் விதிக்கும் கட்டளைகளுக்கும், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு நியமனம் உட்படும்.*
*5.6 சேவையில் ஈடுபடுத்தும்போது தாபனக் கோவையின் II ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பொது நிபந்தனைகளும் பொருந்தும்.*

**6. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை :**
*ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் தரத்துக்கான சம்பள அளவுத் திட்டத்தின் நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை உண்டு. முதல் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். பதவி நிரந்தரமாக்குவதற்கு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருப்பது கட்டாயமாகும்.*

**7. ஆட்சேர்ப்பு முறை**

*7.1 விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்கெனப் பின்வரும் ஆவணங்களையும் அவற்றின் நிழற்படப் பிரதிகளையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளல் வேண்டும் :-*

(i) *பிறப்புச் சான்றிதழ்;*
(ii) *உரிய கல்விச் சான்றிதழ்கள்;*
(iii) *பாடசாலை விடுகைப் பத்திரம்;*
(iv) *அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரது சான்றிதழ்;*
(v) *அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள்;*
(vi) *பதவிக்குரிய தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்;*
(vii) *பதவிக்குரிய அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.*

*7.2 பதவி வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளிடையே அதிகூடிய தகைமைகளைக் கொண்டுள்ளோரே தெரிவு செய்யப்பட்டு ஆட்சேர்க்கப்படுவர்.*

**8. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

8.1 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப் படிவத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

8.2 இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய ஏ4 தாளின் இருபுறங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.08.26 ஆந் திகதியயன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் “செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை மட்டும் அலுப்பிவைத்தல் போதுமானது.

8.3 விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் “சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8.4 பூரணமற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்திய உயர் பதவி வகிப்போர் அல்லது 2,37,060 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தை கொண்ட அரச அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் தமது பதவி முத்திரையை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

8.6 ஆட்சேர்ப்பு செய்யப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி என்பவற்றைப் பன்வில பிரதேச சபையின் செயலாளர் தீர்மானிப்பார். மேலும் இந்த ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யும், தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், மற்றும் இவை தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் அதிகாரம் பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

செயலாளர்,
பன்வில பிரதேச சபை,
பன்வில.

பிரதேச சபை அலுவலகம்,
பன்வில.
2017, யூலை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பாவைணக்கு

இலக்கம் [ ]

**மத்திய மாகாணத்தின் பன்வில பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..........................................................................................................

1.2 முதலெழுத்தினால் குறிப்பிடப்படும் பெயர் :- ..................................................................................

2. 2.1 நிரந்தர முகவரி : ..................................................................................................................................

2.2 தற்போது அரச சேவையில் உள்ளவராயின் அலுவலக முகவரி : ..................................................................

3. 3.1 பிறந்த திகதி : ...................................................................................................................

3.2 01.04.2017 அன்று உள்ளவாறான வயது : வருடங்கள் ............ மாதங்கள் ............. நாட்கள் ............

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ................................................................

5. தொலைபேசி இலக்கம் : ............................................................................

6. ஆண்/பெண்: ..................................................

7. கல்வித் தகைமைகள் :

7.1 கல்வி கற்ற பாடசாலை : ............................................................

7.2 க. பொ. த. (சா.த) பரீட்சை :

வருடம் : .............................. சுட்டெண் : .................................................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

7.3 க. பொ. த. (உயர்தர) பரீட்சை

வருடம் : ............................... சுட்டெண் : .................................................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

8. தொழிற் தகைமைகள் :

8.1 ..........................................................................................................................................................

8.2 ..........................................................................................................................................................

8.3 ..........................................................................................................................................................

9. எப்போதேனும் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவரா என்ற விபரம் :

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிருபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

..................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...........................................

8 - 401

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

*மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்*

மத்திய மாகாண சேவையின் கங்க இஹல கோறளே பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2.

| பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|
| கனரக வாகன இயந்திர இயக்குனர் | 01 | பீ.எல் 3/2016 ரூ.25,790 - 10X270- 10X300 - 10X330 - 12X350 - ரூ. 38,990 | (அ) இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொத. (சாதாரண தர) பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>(ஆ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிய பிரிவுக்கான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். பெக்கோ லோடர் மற்றும் மோட்டார் கிரேடர் இயந்திரத்தை இயக்குவதற்குரிய இயலுமை பெற்றிருத்தல்.<br><br>(இ) 34 அந்தர் நியம நிறையைவிட அதிக நிறை கொண்ட கனரக மோட்டார் வாகனங்கள் கனரக ட்ரேலர் மற்றும் 32 இற்கு மேற்படாத பயணிகள் செல்லக்கூடிய பஸ் வண்டிக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவர்த்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ஏ தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்துக்கமைய வகுப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்) அத்துடன்,<br><br>(ஈ) மேற்குறித்த அனுமதிப்பத்திரத்துக்கு மேலதிகமாக, பதவி தொடர்பில் இயந்திரங்களை இயக்குவது பற்றிய அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றிலிருந்து (NITA/ICTAD) பயிற்சி பெற்றமைக்கான (NVQ 4 தரத்துக்குக் குறையாத) தகைமைச் சான்றிதழ் பெற்றிருத்தல். பெக்கோ லோடர் மற்றும் மோட்டார் கிரேடரை இயக்கும் இயலுமை கொண்ட அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.<br><br>(உ) சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தலுடன் சான்றிதழ்கள் மூலம் அதனை நிருபித்தல் வேண்டும்.<br><br>(ஊ) பகல் மற்றும் இரவு நேரங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(எ) குறைந்தது 5 அடி 2 $^{1}/_{2}$ அங்குல உயரம் கொண்டிருப்பதுடன் வீதிப் போக்குவரத்து பற்றிய சிறந்த அறிவும் பெற்றிருத்தல் வேண்டும். |

**3. ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. கங்க இஹல கோளறே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராக 3 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையில் ஈடுபடுவதற்குரிய பொருத்தமான உடல்நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராகவோ அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**4. ஆட்சேர்ப்பு முறை :**

1. விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுத் தகைமைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் குறித்த பெறுபேறுகளின் மூலம் தகுதியானோர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.
2. கனரக வாகன் ஓட்டுநர் பதவிக்கென ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட முன்னர் எழுத்துப் பரீட்சையின் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் தொழிற் தேர்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் எல்லாத் தகைமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுள் திறன் ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
3. எழுத்துப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுவோர் மட்டும் செயன்முறைத் தேர்வுச் சபையினரால் நடத்தப்படும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடும் தொழிற் தேர்வில் தோற்றுதல் வேண்டும்.தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதித்த பின்னர் உயர் புள்ளிகளைப் பெறுவோரிலிருந்து தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**5. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

1. கனரக வாகனம் இயக்குபவர் ஒப்பந்த அடிப்படையில் 1 வருட சேவைக் காலத்துக்கெனச் சேர்க்கப்படுவார்.
2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் அதிகாரம் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.
4. இதற்கு மேலதிகமாகத் தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணங்கள், கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைகள், மாகாண அரச சேவைகள் ஆணையம் காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி அமையங்களது தலைவர்கள் விதிக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு அனைத்துப் பணியாளர்களும் உட்படுதல் வேண்டும்.
5. போதுமான அளவு பிணையொன்றைப் பணமாகவோ அல்லது வேறெந்த வகையிலோ வைத்தல் வேண்டுமென விதிக்கப்பட்டால், அவற்றைப் பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

**6. விண்ணப்பிக்கவேண்டிய முறை :**

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக A4 தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்த பஸார்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற் மற்றும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**7. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது அவற்றின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்கள் ;
3. வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளரது சான்றிதழ் ;

4. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழ் கிராம அலுவலர் வழங்கியதாக இருத்தல் வேண்டும்) ;
5. தேசிய ஆள் அடையாள அட்டை ;
6. அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ;
7. செல்லுபடியாகும் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் ;
8. கனரக வாகனங்களை இயக்குவது பற்றிய அனுபவச் சான்றிதழ்கள் (சாரதி பதவிக்கான).

தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளில் பொருள் மயக்கம் ஏற்படுமெனின் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

எச்.ரீ.சரத் விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கங்க இஹல கோறளே பிரதேச சபையில் ................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................................................
   (ஆ) முழுப் பெயர் : ..........................................................................................................
2. முகவரி : ........................................
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ..........................
4. பிறந்த திகதி: ஆண்டு : ......................... மாதம் : .......................... திகதி : ..........................
   2017.07.31 அன்று உள்ளவாறு வயது : வருடங்கள் ........................ மாதங்கள் : .......................... நாட்கள் : ..........................
5. ஆண்/பெண் : .........................................
6. விவாகமானவர் /தனித்தவர்: ...........................................
7. தேசிய இனம் : .......................................
8. வம்சாவளியினாலா பதிவினாலா இலங்கைப் பிரசை : .................................
9. கல்வித் தகைமைகள் : ..............................
10. தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் : .............................
11. சாரதி அனுமதிப்பத்திரத்தின்
    (அ) இலக்கம் : .............................
    (ஆ) வழங்கப்பட்ட திகதி : .............................
12. நீங்கள் ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் சேவையில் உள்ளவரெனின், தற்போது வகிக்கும் பதவியும் சேவைக் காலமும் : .............................
    (நிரந்தரம் /சாமயோசிதம் /தற்காலிகம் /பதிலீடு /கொடுப்பனவு அடிப்படை)

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நியமனத்துக்கு முன்னர் தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னர் தெரியவரின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :

8-458

## மேல் மாகாண அரச சேவையில் உள்ள பதவி வெற்றிடம்

*மஹர பிரதேச சபை*

*மேல் மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாயுள்ள கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு மேல் மாகாணத்தினுள் வதியும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வேலைக்கள ஊழியர்கள் | 02 | ரூபா 24,250-10X250 - 10X270-10X300-12X330-ரூபா 36,410 | 8 ஆந் தரம் (ஆண்டு 9) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; |
| 02 | சௌக்கிய ஊழியர்கள் | 01 | ரூபா 24,250-10X250-10X270-10X300 - 12X330- ரூபா 36,410 | 8 ஆந் தரம் (ஆண்டு 9) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; |

**ஆட்சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள் :**

(1) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மைய 03 வருட காலப்பகுதியில் மேல்மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு மேற் குறிப்பிட்ட வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

(4) விண்ணப்பதாரிகள் கடமையை நிறைவேற்றுவதற்கான நல்ல மனநிலை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(5) தண்டனைச் சட்ட கோவையின் கீழ் நீதிமன்றில் தண்டிக்கப்பட்டவராகவோ அல்லது அரசாங்க, உள்ளூராட்சி சேவையிலிருந்து விலக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.

(6) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் மஹர பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

**சேவை நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ii) ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்துக்கு உட்படுவர் ;

(iii) விதவைகள்/தபுதாரர், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(iv) இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கை குடியரசின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது மஹர பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் கட்டுப்பட்டவராவார்.

**ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம் :**

1. நேர்முகப்பரீட்சையின்மூலம் தகைமைகளுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர் ;

2. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) தங்கள் வதிவை நிருபிக்கும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2 நன்னடத்தைச் சான்றிதழ்கள் ;
(6) ஏனைய தகைமைகளை காட்டும் சான்றிதழ்கள் ;
(7) சேவை அனுபவ சான்றிதழ்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய "12x8" அளவில் விண்ணப்பப்படிவத்தை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதி 2017.08.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், மஹர பிரதேச சபை, பஹலகரகஹமுன, கடவத்தை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை தாங்கள் சேவையாற்றும் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.) குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளரும் சபையின் தத்துவத்தையும் பணிகளையும்,
பொறுப்புக்களையும் நிறைவேற்றுகின்ற அலுவலரும்,
மஹர பிரதேச சபை.

மஹர பிரதேச சபை அலுவலகம்,
பஹல கரகஹமுன,
கடவத்தை,
26, யூலை 2017.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

மேல் மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் .................................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..................................................................................................

முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :- .................................................................................

2. நிரந்தர வதிவிட மாவட்டம் :- ......................................................................................................

3. நிரந்தர விலாசம் :- ..................................................................................................

4. பால் (ஆண்/பெண்) :- ..................................................................................................

5. பிறந்த திகதி :- ..................................................................................................

2017.08.21 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : ............................. மாதங்கள் : ............................ நாட்கள் : ............................

6. தேசிய ஆள் அடையாள அட்டை :- ..................................................................................................

7. நீர் இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமாகவா ? பதிவின்மூலமாகவா ? :- ..................................................................

8. தொலைசேி இலக்கம் :- ..................................................................................................

9. (i) கல்வித் தகைமைகள் :
(ii) க.பொ.த.(சா.த)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(iii) க.பொ.த.(உ.த) :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(iv) ஏனைய தகைமைகள் :

10. சேவை அனுபவம் :

(i) தற்போது வகிக்கும் பதவி :- ........................................................................
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :- ........................................................................
(iii) அப்பதவிக்கான சேவைக் காலம் :- ........................................................................
(iv) இதற்கு முன்னர் சேவையாற்றிய இடம் மற்றும் வகித்த பதவி :- ........................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என நிருபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமயற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.............................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

................................
திகதி

ஏற்கனவே சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவன தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியான திரு. / திருமதி/ செல்வி ...................................................................................... தற்போது இவ்வலுவலகத்தில் ........................................................................ பதவியில் சேவையாற்றுகிறார். விண்ணப்பப்படிவத்தை சிபார்ச செய்து சமர்ப்பிக்கிறேன்/சமர்ப்பிக்கவில்லை.

.............................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை

திகதி ..............................

8-478

---

# திருத்தம்

## மொறட்டுவ மாநகர சபை

மொறட்டுவ மாநகர சபையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரி, 2017.07.22 ஆம் திகதி உள்ளூராட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சாரதி பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு செய்யும் கல்வித் தகைமை கீழ்க் காணும் வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.

"க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் மொழி உட்பட திறமைச் சித்திகள் இரண்டு (02) அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்)"

மேலும் அந்தப் பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.08.31 ஆந் திகதி என திருத்தியமைக்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.

**எம்.எம். சி. கே. கே. மான்னப்பெரும,**
மாநகர ஆணையாளர்,
மொறட்டுவை மாநகர சபை.

8 - 664

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## யட்டிநுவர பிரதேச சபை

1893 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தினதும் அதன் திருத்தப்பட்ட சட்டத்தினதும் கீழ் அதன் 7 (1) பிரிவின்படி எம். எஸ். ஏ. அஸ்மி (தே. அ. இல. 922592241V) என்பவர் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இடத்தில் மாடு அறுவை செய்யும் நிலையத்தை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு கேட்டுள்ளார்.

02. குறித்த இடத்தில் அவ்வாறான அனுமதிப்பத்திரம் வழங்குவதை யட்டிநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதாயின், உரிய காரணங்களை எழுத்து மூலம் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 60 நாட்களுக்குள் இரு (2) பிரதிகளில் தகவுடைய அதிகாரியான குறித்த 3 ஆ பிரிவினதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 9 (3) ஆவது பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய தகவுடைய அதிகாரியான செயலாளர், யட்டிநுவர பிரதேச சபை, எம்பில்மீகம, பிலிமத்தலாவ என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் அனுப்பி வைக்கப்படும்போது கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "எதிர்ப்பாளர்" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**மாடு அறுவை செய்யும் நிலையத்தை நடத்திச் செல்லவென வேண்டிக்கொள்ளும் இடத்தின் விபரங்கள் கொண்ட அட்டவணை**

| மாடு அறுவை செய்யும் நிலையத்தை நடத்திச் செல்வதற்கென விண்ணப்பித் துள்ளவர் பெயரும் முகவரியும் | இடத்தின் உரிமையாளர் பெயரும் முகவரியும் | மாடு அறுவை செய்யும் நிலையத்தை நடத்த உத்தேசித்துள்ள இடத்தின் முகவரியும் இனங்கண்டு கொள்ளும் விபரங்களும் | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| எம். எஸ். ஏ. அஸ்மி, இல. 45/சீ, தெஹிஅங்க, முருத்தலாவ. | ஏ. எம். எம். முஹாஜரீன், இல. 170, தெஹிஅங்க, முருத்தலாவ | தெஹிஅங்க, கலஹாகும்புர வீதி, நிக்ககொல்லஹேன வத்த | தெஹிஅங்க வடக்கு |

டபிள்யூ. ஏ. எல். துஷாரி ஜயரத்ன,
செயலாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

தீர்மான இலக்கம் : 733.

2017, யூலை 18.

8 - 362

**சிலாபம் பிரதேச சபை**

கிராமிய பாதைகளை பெயர் குறிப்பிடுவது பற்றி செய்யப்படும் அறிவித்தல்

*சிலாபம் பிரதேச சபையில் 2016.09.14 ஆந் திகதி செயல்பாட்டுக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் பாதையினை உத்தேசிக்கப்பட்டுள்ள பெயரினால் பிரகடனப்படுத்துவது பற்றி எதிர்ப்பு தெரிவிக்கப்படாததனால் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதி பெயர் குறிப்பிடல் மற்றும் நினைவுச் சின்னம் தாபித்தல் மற்றும் நிருவகித்தல் சட்டத்தின் 6 ஆம் பிரிவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 9 (3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 198 ஆம் பிரிவின் படி 2016.12.02 ஆந் திகதி கௌரவ முதலமைச்சரின் அனுமதி கிடைக்கப் பெற்ற கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட "கன்னன்கர மாவத்தை" பெயரினை பயன்படுத்துவதாக பொது மக்களுக்கு தெரிந்துக் கொள்வதற்காக இத்துடன் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*01. முகுணுவடவன கிராம அலுவலர் பிரிவில் மிதுரு உயன பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு போக்குவரத்து செய்வதற்காக உள்ள பாதை - "கன்னன்கர மாவத்தை"*

| தொடர் இலக்கம் | பெயர் குறிப்பிடப்பட்ட பாதை | பிரகடனப்படுத்தப்படும் பெயர் |
|---|---|---|
| 01 | முகுணுவடவன கிராம உத்தியோகத்தர் பிரிவில் மிதுரு உயன பிரதேத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு போக்குவரத்து செய்வதற்கு அமைந்துள்ள பாதை | "கன்னன்கர மாவத்தை" |

ஆர்.ஜே.ஏ.எஸ்.ஹேமலதா,
செயலாளர்,
சிலாபம் பிரதேச சபை.

*8 - 426*

## வரவு செலவுத் திரட்டுக்கள்

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் செயலாளர் ஏ. எப். பி. பர்னாந்து ஆகிய நான், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்துவதற்கு 2017.06.14 ஆம் திகதிய 82 (6) ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ்த் தீர்மானித்துள்ளேன் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

ஏ. எப். பி. பர்னாந்து,
செயலாளர் மற்றும் தத்துவங்கள் பணிகளை,
செயற்படுத்தும் அலுவலர்,
ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆராச்சிக்கட்டுவ,
*2017, யூன் 14.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரமும், 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் தொகுதியின் 216 ஆம் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் பின்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வுக்கு உட்பட்ட ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு, 2016.12.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று அத்துடன் 2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை பொது மக்களின் தகவல் பொருட்டு பகிரங்கப்படுத்துவதற்கு நான் தீர்மானித்துள்ளேன்.*

**அட்டவணை I**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

*2016, திசெம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு*

| | | 2015 | 2016 |
|---|---|---|---|
| **1.** | **மீண்டுவரும் வருமானம்** | | |
| 1. | வீதவரியும் வரியும் | 2,941,254.19 | 3,586,543.59 |
| 2. | வாடகை | 2,502,875.00 | 7,322,197.77 |
| 3. | உத்தரவுப்பத்திர கட்டணங்கள் | 2,116,097.86 | 1,598,275.52 |
| 4. | சேவைகளுக்கான கட்டணங்கள் | 1,026,672.16 | 1,012,154.67 |
| 5. | குற்றப்பணமும் பிடியாணை கட்டணமும் | 5,005,206.00 | 9,234,511.10 |
| 6. | ஏனைய வருமானங்கள் | 7,617,841.72 | 8,345,403.69 |
| 7. | வருமான நன்கொடை | 26,676,411.40 | 28,945,066.47 |
| | **மொத்த மீண்டுவரும் வருமானம்** | **47,886,358.33** | **60,044,152.81** |
| **2.** | **மீண்டுவரும் செலவினம்** | | |
| 1. | சம்பளமும் படியும் | 33,182,895.00 | 33,531,334.99 |
| 2. | பிரயாணச் செலவு | 255,438.00 | 246,504.42 |
| 3. | வழங்கலும் உபகரணமும் | 3,411,006.48 | 3,807,973.32 |
| 4. | மூலதன சொத்து திருத்தமும் பராமரிப்பும் | 6,525,161.31 | 11,992,234.17 |
| 5. | போக்குவரத்து, இணைப்பு, சேவைகள் | 2,446,416.54 | 4,229,052.89 |
| 6. | வட்டி செலுத்துதலும் பங்கிலாபமும் | | |
| 7. | நன்கொடை, உதவுதொகை, மானியம் | 136,270.74 | 94,355.01 |
| 8. | ஓய்வூதியமும் ஓய்வூதிய பணிக்கொடையும் | 74,092.47 | 102,466.71 |
| | **மொத்த மீண்டுவரும் செலவினம்** | **46,031,280.54** | **54,003,921.51** |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகரித்த/குறைந்த வருமானமும் செலவினமும்** | **1,855,077.79** | **6,040,231.30** |
| **3.** | **மூலதன செலவினம்** | | |
| 8. | மூலதன நன்கொடை | 73,023,133.30 | 11,973,523.12 |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகரித்த வருமானமும் மூலதன வருமானமும்** | **74,878,211.09** | **18,013,754.42** |
| **4.** | **மூலதன செலவினம்** | | |
| 9. | உபகரண செலவு | 73,805,319.42 | 11,580,141.44 |
| | **மிகை அல்லது குறைவு** | **1,072,891.67** | **6,433,612.98** |

**அட்டவணை II**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

*2016.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று*

| **சொத்துக்கள்** | குறிப்பு | **2015.12.31** | **2016.12.31** |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | - | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | 06 | 134,015,432.96 | 134,703,136.85 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | - | | |
| இருப்பு | 07 | 1,732,616.06 | 2,357,523.12 |
| வருமான கடன்பட்டோர் | 08 | 48,082,427.86 | 58,781,767.03 |
| ஊழியர் கடனும் முற்பணமும் | 09 | 4,839,982.33 | 6,004,500.30 |
| முற்கொடுப்பனவுகள் | 10 | | |
| முதலீடுகள் | 11 | 105,274.55 | 6,626,022.46 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 12 | 3,320,855.43 | 1,925,656.53 |
| | | 58,081,156.23 | 75,695,469.44 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **192,096,589.19** | **210,398,606.29** |
| **உரிமைமுலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| திரண்ட நிதியமும் ஒதுக்கமும் | 13 | 185,481,136.66 | 196,927,670.74 |
| | | 185,481,136.66 | 196,927,670.74 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகால கடன் | 14 | | |
| நடப்புப் பொறுப்புக்கள் | 15 | 6,615,452.53 | 13,470,935.55 |
| | | 6,615,452.53 | 13,470,935.55 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **192,096,589.19** | **210,398,606.29** |

**அட்டவணை III**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

*2016.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று*

| | 2015.12.31 | 2016.12.31 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| சாதாரண நடவடிக்கையிருந்தான மிகை /(குறைவு) | 1,855,077.79 | 6,040,231.30 |
| **பணமல்லாத விடயங்களின் மாற்றங்களுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம் | | |
| முந்திய வருட சீராக்கம் | 13,611,011.80 | 4,325,217.21 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிகை/குறைவு** | **15,466,089.59** | **10,365,448.51** |
| தொழிற்படு மூலதனத்தின் அசைவுகள் | | |
| இருப்பு/கடன்படுநர், பிற வருமதிகள் (அதிகரிப்பு)/குறைவு | (8,377,168.02) | (19,004,080.72) |
| கடன்கொடுநர், பிற சென்மதிகளின் அதிகரிப்பு/(குறைவு) | (4,697,536.20) | 6,855,483.02 |
| **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | **(13,074,704.22)** | **(12,148,597.70)** |
| பணிக்கொடை செலுத்துதல் | | |
| **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **2,391,385.37** | **(1,783,149.19)** |
| **முதலீட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| ஆதன கொள்வனவு | (72,410,696.28) | (1,887,280.84) |
| மூலதன செலவினம் | (1,394,623.14) | (9,692,860.60) |
| பண முதலீடுகள் | (4,985.42) | (5,431.39) |
| **முதலீட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **(73,810,304.84)** | **(11,585,572.83)** |
| **நிதி நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| மூலதன பெறுவனவு | 73,023,133.30 | 11,973,523.12 |
| கடன் எடுத்தல்/(செலுத்தல்) | | |
| **நிதி நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **73,023,133.30** | **11,973,523.12** |
| **வருடத்தினுள் தேறிய காசுப்பாய்வு** | **1,604,213.83** | **(1,395,198.90)** |
| **2016.01.01 இல் காசும் காசுக்கு சமமானவைகளும்** | 1,716,641.60 | 3,320,855.43 |
| **2016.12.31 இல் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு 01)** | **3,320,855.43** | **1,925,656.53** |
| *குறிப்பு 01 :* | | |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - பொது | 2,891,278.60 | 1,793,511.02 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - ஊழியர் கடன் | 429,576.83 | 132,145.51 |
| சில்லறைக் காசு | | |
| | **3,320,855.43** | **1,925,656.53** |